# <u>தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் உதவி அமர்வு நீதிமன்றம்</u>

<u>திருவள்ளூர்</u>

**முன்னிலை : திரு.இரா. வேலரஸ்** B.Sc., B.L., L.L.M.,
தலைமை நீதித்துறை நடுவர்
மற்றும் உதவி அமர்வு நீதிபதி
திருவள்ளூர்

2023 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>அமர்வு வழக்கு எண்.71/2012</u>**

**<u>Sessions Case No.71/2012</u>**

**CNR No.TNTR1B000172 2012**

**<u>(முன்னுரைப் பதிவு வழக்கு எண்.8/2010</u>**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
ஊத்துக்கோட்டை)

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக<br>காவல் ஆய்வாளர்<br>பெரியபாளையம் காவல் நிலையம்<br>குற்ற எண்.484/2010 |
| எதிரிகளின் பெயர்கள் மற்றும் விவரங்கள் | 1. அன்பு (எ) அன்பழகன் (வயது. 35)<br>த.பெ. கோபால்<br>எண்.855 பெருமாள் கோயில் தெரு,<br>துராபள்ளம் கிராமம், கும்முடிபூண்டி தாலூக்கா.<br>2 தினக்குமார் (எ) தினேஷ்குமார் (வயது 35)<br>த.பெ. கோதண்டன்<br>எண்.13 கன்னிகோயில் தெரு, குரோம்பேட்டை,<br>சென்னை 44<br>3. விஜி (எ) விஜியகுமார் (வயது 41)<br>த.பெ. சுப்ரமணி<br>வள்ளலார் தெரு, கரிமேடு, அண்ணாநகர், பட்டாபிராம்,<br>சென்னை 56.<br>( 2 மற்றும் 3 எதிரிகள் இறந்துவிட்டதால் 2 மற்றும் 3 எதிரிகள் மீதான குற்றங்கள் அற்றுபோய்விட்டது) |
| எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் | 1 முதல் 3 எதிரிகள் ஆயுதங்களுடன் வழிபறி கொலை முயற்சி செய்ததாக எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 120(B), |

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:15:43 +0530

| | |
|---|---|
| | 394 உ/இ. 397 உ/இ.109 இதச பிரிவுகளின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் பதிலுரை | குற்றவாளி இல்லை |
| நீதிமன்ற உத்தரவு | முடிவில், முதல் எதிரி மீது இ.த.ச. பிரிவு 120(B), 394 உ/இ.397 பிரிவுகள் படிக்கு சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி முதல் எதிரியை கு.வி.மு.ச.235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள (**P.I.No.05/2017**) சா.பொ. 1 பேனா கத்தி இவ்வழக்கு தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்படும்பட்சத்தில் மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவின்படிக்கும், மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்யப்படாதபட்சத்தில், சா.பொ.1 ஆன பேனா கத்தியை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கவும், வழக்கு சொத்தான TN 20 L 3628 லைட் சாக்லட் கலர் மாருதி ஆம்னி வேன் வாகனத்தை அதன் உரிமையாளர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுவிட்ட காரணத்தினால் இவ்வழக்கு தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்படும்பட்சத்தில் மேல் முறையீட்டு நீதிமன்ற உத்தரவிற்கிணங்கவும் மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்யப்படாத பட்சத்தில், மேல் முறையீட்டு காலம் முடிவடைந்த பிறகு அவரே தொடர்ந்து வைத்துக்கொள்ளவும் அவரால் எழுதி கொடுக்கப்பட்ட பிணையை ரத்து செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| அரசுதரப்பு வழக்குரைஞர் | திரு. சேவியர் பாண்டியன்<br>அரசு தரப்பு கூடுதல் வழக்குரைஞர் |
| எதிரிகள் தரப்பு வழக்குரைஞர் | M/s.S. சந்திரசேகர், M. தமிழ்ச்செல்வன் மற்றும் T. ராஜன் |

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:15:50 +0530

தேதி 27.10.2023 **தலைமை நீதித்துறை நடுவர்** 

மற்றும் உதவி அமர்வு நீதிபதி

திருவள்ளூர்

இவ்வழக்கு 25.10.2023 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு கூடுதல் வழக்குரைஞர் திரு. சேவியர் பாண்டியன் அவர்களும் எதிரிகள் தரப்பில் M/s. S. சந்திரசேகர், M. தமிழ்ச்செல்வன் மற்றும் T. ராஜன் ஆகியோரும் ஆஜராகி செய்த இரு தரப்பு வாதங்களை கேட்டும் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துமூலமான வாதுரை மற்றும் வழக்கில் முன்னிடப்பட்டுள்ள அரசு தரப்பு சாட்சிய மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

இவ்வழக்கில் 3 வது எதிரியின் மனைவி ஆனந்தி என்பவர் பாபு என்பவருடன் தகாத உறவு வைத்துள்ளதாகவும் எனவே பாபு என்பவரை கொலை செய்யவேண்டும் என்பதற்காக 3 வது எதிரி 1 மற்றும் 2 எதிரிகளிடம் சென்று பாபுவை கடத்தி கொலை செய்யவேண்டும் என்று அவர்களுடன் சேர்ந்து திட்டமிட்டதாகவும், அதன்பேரில் 1 மற்றும் 2 எதிரிகள் 02.06.2010 அன்று சுமார் 16.30 மணியளவில் பட்டாபிராமில் வசிக்கும் பாபு என்பவரின் டி.எண்.20 ஏ.எல் 3628 என்ற மாருதி காரை பட்டாபிராமில் உள்ள செல்வராணி மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்று வாடகைக்கு அமர்த்தி இரண்டு எதிரிகளும் அதில் ஏறி, பெரியபாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஊத்துக்கோட்டை தாலூக்கா,

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:15:56 +0530

முத்தாப்புதுபபேட்டை to மாமண்டுர் ரோடு செல்லும் பாதையில் வெங்கல் பஜாரில் வண்டியை நிறுத்தி பூ, ஸ்வீட்ஸ் வாங்கிக்கொண்டு மீண்டும் வண்டியில் ஏறிக்கொண்டு மாமண்டுர் போகச் சொல்லி இரண்டு பேரில் ஒருவர் பாபுவை செயினால் கழுத்தில் போட்டு இறுக்கி மற்றொருவர் கத்தியால் அறுக்க வந்ததாகவும், சாட்சி பாபுவின் முகத்தில் கல்லால் குத்தியதாகவும், சாட்சி பாபு கார் கதவை திறந்துகொண்டு காரில் இருந்து வெளியில் குதித்து தப்பிச் சென்றதாகவும், எனவே 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 120(B), 394 உ/இ. பிரிவு 397 மற்றும் 3 வது எதிரி மீது இ.த.ச.120(B), 394 உ/இ.பிரிவு 397 உ/இ.பிரிவு 109 பிரிவுகள் படிக்கு குற்றம் புரிந்துள்ளதாக பெரியபாளையம், காவல் ஆய்வாளர் 1 முதல் 3 எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கு அறிவார்ந்த மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஊத்துக்கோட்டை அவர்களால் முதல் நிலை பதிவேட்டு வழக்கெண் 8/2010 ஆக 15.11.2010 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207 ன் படிக்கு எதிரிகளுக்கு வழங்கி ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 397 கீழான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கக்கூடிய குற்றம் என்பதால் திருவள்ளூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு 05.08.2011 அன்று கமிட்டல் செய்துள்ளார். முதன்மை அமர்வு நீதிமன்றத்தில்

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:16:01 +0530

இவ்வழக்கு 17.02.2012 அன்று அமர்வு வழக்கு எண்.71/2012 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் முதன்மை அமர்வு நீதிபதி, திருவள்ளூர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.838/SC/2012, நாள் 21.02.2012ன் படி இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டு அதே அமர்வு வழக்கு எண்ணில் இந்நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

3. இவ்வழக்கு ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் பெறப்பட்டவுடன் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானபின் அரசு தரப்பினர், எதிரிகள் தரப்பினர் இரு சாரருக்கும் அளிக்க வேண்டிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு இவ்வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் குற்றம் புரிந்திருப்பார்கள் என்று கருதவும், கருத்தில் கொண்டு வழக்கு நடவடிக்கைகளை செயலாற்றவும் வழிவகுப்பனவாக இருந்தமையால் 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 120(B), 394 உ/இ. பிரிவு 397 மற்றும் 3 வது எதிரி மீது இ.த.ச.120(B), 394 உ/இ.பிரிவு 397 உ/இ.பிரிவு 109 படிக்கு குற்றச்சாட்டுகள் வனைந்து படித்துகாட்டி தமிழில் விளக்கி வினவியபோது எதிரிகள் குற்றங்களை மறுத்து விசாரணை வேண்டினர். எனவே, இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட சாட்சிகளின் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அரசு தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 16 வரையும்,

சா.பொ.1ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாயிலாக எழும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கமாவது :

(i) **அசா.1 கோபி** தனது சாட்சியத்தில் தான் மாமண்டூரில் குடியிருந்து வருவதாகவும், கொத்தனார் வேலை செய்து வருவதாகவும், கடந்த 2010ம் ஆண்டு தான் வேலைக்கு சென்றுவிட்டு வந்தபோது அசா.1 பாபு ரோட்டில் உட்கார்ந்துகொண்டு அழுதுகொண்டிருந்தார் என்றும், அவரை தான் விசாரித்தபோது அவர் அவரது காரில் வந்தபோது அவரை அடித்து போட்டுவிட்டு அவரது வாகனத்தை யாரோ எடுத்துச்சென்றுவிட்டதாக தெரிவித்தார் என்றும், அவருக்கு முகத்தில் ரத்த காயம் இருந்தது என்றும், அதனால் வெங்கல் காவல் நிலையத்திற்கு சென்று இது சம்மந்தமாக புகார் கொடுத்ததாகவும், அவரை தான் அழைத்து சென்றதற்காக கையெழுத்து போட்டதாகவும், இது சம்மந்தமாக காவல் துறையினர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) **அசா.2 பாபு** தனது சாட்சியத்தில் தான் தற்போது முத்தையால் பேட்டையில் குடியிருந்து வருவதாகவும், கார் டிரைவராக பணிபுரிவதாகவும், கடந்த 02.06.2010 அன்று மாலை சுமார் 04.10 மணியளவில் வெங்கல் அருகே உள்ள மாமண்டூரில் தன்னை சவாரிக்கு 1, 2ம் எதிரிகள் அழைத்தார்கள் என்றும், அவர்களின் அக்காவிற்கு மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்று

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:16:13 +0530

தன்னிடம் தெரிவித்தார்கள் என்றும், ஓம்னி வண்டியிலிருந்து யாரிடமோ செல்போனில் பேசினார்கள் என்றும் மேற்படி மாமண்டுருக்கு தன்னை அழைத்து சென்று தன்னிடம் ராகு காலம் மற்றும் எமகண்டம் என்று சொல்லி 6 மணிக்கு மேல் போகலாம் என்று தெரிவித்தாகவும், சுமார் 06.10 மணியளவில் 1ம் எதிரி அன்பு தன்னுடைய கழுத்தில் சங்கிலி போட்டு இறுக்கினார் என்றும் 2ம் எதிரி தினேஷ்குமார் கத்தியால் தனது தாடையிலும் கழுத்திலும் அறுத்தார் என்றும், இதனால் தனக்கு கழுத்தில் ரத்த காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் அவர்களிடமிருந்து தான் இறங்கி ஓட ஆரம்பித்ததாகவும் 2ம் எதிரி தினேஷ் கல்லை எடுத்து தனது இடது கண் புருவத்தின் கீழ் அடித்தார் என்றும், அதனால் தனக்கு காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் 2ம் எதிரி தனது தலையில் கல்லால் குத்தியதால் தலையிலும் காயம் ஏற்பட்டது என்றும், தனது ஓம்னி மாருதி வண்டியின் பதிவு எண். டி.என். 20 எல் 3628 என்றும், அது சாக்லெட் கலர் என்றும், தன்னை அடித்து போட்டுவிட்டு தன்னுடைய ஓம்னி வண்டியை எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்றும், தான் மாமண்டுர் அருகே உள்ள கிராமத்திற்கு சென்று அங்கிருந்தவர்களிடம் உதவி கேட்டபோது அங்கிருந்த ஒரு நபர் தன்னை வெங்கல் காவல் நிலையத்திற்கு அழைத்துச்செல்ல உதவினார் என்றும், மேற்படி காவல் நிலையத்தில் நடந்த சம்பவத்தை புகாராக எழுதி கொடுத்தாகவும், மேற்படி புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான்

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:16:18 +0530

என்றும் அந்த புகார் **அ.த.சா.ஆ.1** என்றும், பின்னர் போலீசார் அந்த வண்டியை கண்டுபிடித்துவிட்டார்கள் என்றும், தான் நீதிமன்றத்தில் மனு போட்டு வண்டியை வாங்கிச்சென்றுவிட்டதாகவும், குடும்ப கஷ்டம் காரணமாக மேற்படி ஓம்னி வாகனத்தை விற்றுவிட்டதாகவும், இன்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள மாருதி வண்டி தன்னுடையதுதான் என்றும் சாட்சியம் அளித்த நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோள் விடுத்ததன் அடிப்படையில் முதல் விசாரணை தொடர்ச்சி என வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு பல்வேறு சந்தர்ப்பங்கள் அரசுத்தரப்பிற்கு அளித்தும் அரசுத்தரப்பில் பல முயற்சிகள் மேற்கொண்டும் மேற்படி அசா.2 ஐ கண்டுபிடிக்க இயலவில்லை என்று தெரிவித்த காரணத்தினால் மற்ற சாட்சிகள் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**(iii) அசா.3 டாக்டர்.ராமச்சந்திரன்** தனது சாட்சியத்தில் தான் வெங்கல் கதவு எண்.250, பசார் தெருவில் கிளினிக் வைத்து நடத்தி வருவதாகவும், கடந்த 02.06.2010 அன்று இரவு சுமார் 07.30 மணியளவில் சுமார் 27 முதல் 30 வயது மதிக்கத்தக்க பாபு என்ற நபர் தலை, மூக்கு, உதடு ஆகிய இடங்களில் காயத்துடன் வந்ததால் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து அவரிடம் எவ்வாறு இந்த காயங்கள் ஏற்பட்டது என்று கேட்டபோது அவர் இரண்டு

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:16:29 +0530

நபர்கள் அவரது வண்டியில் ஏறி வாடகைக்கு வண்டி வேண்டுமென்று கேட்டதாகவும், வண்டியை ஓட்டிய சிறிது நேரத்தில் அவரை பிடித்து கீழே தள்ளிவிட்டு வண்டியை எடுத்துச்சென்றுவிட்டதாகவும் தன்னிடம் சொன்னார் என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக பெரியபாளையம் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) **அசா.4 வெங்கடேசன்** தனது சாட்சியத்தில் தான் சின்ன ஒபாலாபுரம் பகுதியில் செக்யூரிட்டியாக வேலை பார்த்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தான் பார்த்தது இல்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் மகசரிலும் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அது **அ.த.சா.ஆ.2** மற்றும் **அ.த.சா.ஆ.3** என்றும், மேற்படி கையெழுத்துக்களை 10 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பாக்கம் போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் போட்டதாகவும் மேற்படி கையெழுத்தை எதற்காக கேட்டார்கள் என்பதை போலீசார் தன்னிடம் சொல்லவில்லை என்றும், தன்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பரிலும் எதுவும் எழுதப்படாமல் இருந்தது என்றும், போலீசார் கேட்டுக்கொணடதன்பேரில் கையெழுத்து போட்டுக்கொடுத்ததாகவும், இவ்வழக்கின் மற்ற எதிரிகளான தினேஷ்குமார் மற்றும் விஜி ஆகியோர்களை தான் பார்த்தது இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் தெரிவித்து அரசு தரப்பினை சார்ந்து சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:16:35 +0530

மாறியுள்ளார்.

(v) **அசா.5 பாபு** தனது சாட்சியத்தில், தான் தற்போது ஆந்திரா மாநிலம் ஸ்ரீகாளஹஸ்தியில் வசித்து வருவதாகவும், ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாகவும், இதற்கு முன்பாக வாகனங்களை வாங்கி விற்கும் தொழில் செய்து வந்ததாகவும், இவ்வழக்கின் 2 ம் எதிரி தினேஷ்குமாரை தனக்கு தெரியும் என்றும், அவரிடமிருந்து தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட மாருதி ஓம்னி வாகனத்தை 10 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.60,000/−த்திற்கு விலைக்கு வாங்கியதாகவும், மேற்படி வாகனத்திற்குரிய அசல் ஆர்.சி. புத்தகத்தை தினேஷ்குமாரிடம் தான் கேட்டபோது ரூ.5,000/− ஆயிரத்தை அட்வான்ஸ் தொகையாக கேட்டார் என்றும், ஒரு வாரம் கழித்து அசல் ஆர்.சி. புத்தகத்தை கொடுப்பதாக சொன்னார் என்றும், அவர் கேட்டபடி தான் ரூ.5000/−த்தை அவரிடம் கொடுத்ததாகவும், தமிழ்நாட்டிலிருந்து போலீசார் தங்கள் வீட்டிற்கு வந்தார்கள் என்றும், அப்போது ஓம்னி வாகனம் தனது வீட்டில் இருந்தது என்றும், மேற்படி ஓம்னி வேன் திருட்டு வண்டி என்று சொல்லி போலீசார் எடுத்துச்சென்றனர் என்றும், இது சம்மந்தமாக போலீசார் எழுதி அதனை படித்து காண்பித்துவிட்டு தன்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றும், மேலும் இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) **அசா.6 சுப்பிரமணி** தனது சாட்சியத்தில் தான் தற்போது

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:16:40 +0530

கும்மிடிப்பூண்டி எளாவூர் கிராமத்தில் வசித்து வருவதாகவும், கொத்தனார் வேலை செய்து வருவதாகவும், அசா.4 வெங்கடேசனையும் 2ம் எதிரி தினேஷ் (எ) தினேஷ்குமாரையும் தனக்கு தெரியும் என்றும், கடந்த 17 ஆண்டுகளுக்கு முன்பு மாலை சுமார் 04.00 மணியளவில் எளாவூர் ரயில்வே ஸ்டேசன் அருகில் கூட்டமாக இருந்தார்கள் என்றும், அங்கு அன்பழகன், விஜயகுமார் மற்றும் தினேஷ்குமாரை போலீசார் கார் திருடியது சம்மந்தமாக விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், அதில் தான் கையெழுத்து போட்டதாகவும், அன்பு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அது **அ.த.சா.ஆ.4** என்றும், கைப்பற்றுதல் மகரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அது **அ.த.சா.ஆ.5** என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் தெரிவித்து அரசு தரப்பினை சார்ந்து சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்.

(vii) **அசா.7 டாக்டர். பஞ்சாபிகேசன்** தனது சாட்சியத்தில், தான் தற்போது கீழ்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் தீக்காயப்பிரிவில் உதவி பேராசியராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 03.06.2010 அன்று தான் திருவள்ளூர் அரசினர் தலைமை மருத்துவமனையில் பணியிலிருந்தபோது காலை 12.25 மணிக்கு பாபு, த/பெ. குப்புசாமி என்பவரை பரிசோதனை செய்ததாகவும், அவர் தன்னிடம் இரண்டு தெரியாத நபர்கள் 02.06.2010 அன்று மாலை 06.18

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:16:46 +0530

மணியளவில் கல், கத்தி மற்றும் சங்கிலி கொண்டு மாமண்டுரில் வைத்து தாக்கியதாக தெரிவித்தார் என்றும், அவரை பரிசோதித்தபோது அவர் சுய நினைவுடன் இருந்தார் என்றும், அவருக்கு தாடையில் 1x1x1 செ.மீ. அளவில் தோல் கிழிந்த காயம் காணப்பட்டது என்றும், அவரது நெற்றியின் இடது பகுதியில் 2x1x1 செ.மீ. அளவில் தோல் கிழிந்த காயம் காணப்பட்டது என்றும், அவரது தலையின் இடது பகுதியில் 1x1 செ.மீ. அளவில் இரத்த கட்டு காணப்பட்டது என்றும், அவருக்கு வெளி நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்று சான்று வழங்கியதாகவும், தன்னிடம் காட்டப்படும் காயச்சான்றிதழ் தன்னால் பாபுவிற்கு வழங்கப்பட்டதுதான் என்றும், அது **அ.த.சா.ஆ.6** என்றும், இது சம்மந்தமாக பெரியபாளையம் காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(viii) **அசா.8 அகமது அப்துல் காதர்** தனது சாட்சியத்தில், தான் தற்போது சென்னை மாநகரம் மாதவரம் போக்குவரத்து புலனாய்வு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், 16.06.2010 அன்று ஆரம்பாக்கம் காவல் நிலைய வட்ட ஆய்வாளராக பணியிலிருந்தபோது ஆரம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண். 294/2010, இதச பிரிவுகள் 120பி, 302, 201 வழக்கில் எதிரிகளை தேடிவந்த நிலையில் 16.06.2010 அன்று மாலை 16.00 மணிக்கு மேற்படி வழக்கின் எதிரிகளான அன்பு (எ) அன்பழகன், தினக்குமார் (எ) தினேஷ்குமார்

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:16:51 +0530

ஆகியோர்களை அடையாளம் கண்டு எளாவூர் பஜாரில் வைத்து கைது செய்து சாட்சிகள் வெங்கடேசன், சுப்பிரமணி ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்தபோது மேற்படி எதிரிகள் இருவரும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும், அந்த வாக்குமூலத்தில் ஆரம்பாக்கம் கொலை வழக்கில் அவர்கள் சம்மந்தப்பட்டிருப்பதாகவும் கொலை செய்யப்பட்ட நபரை கடத்துவதற்கு பயன்படுத்தபப்ட்ட டிஎன் 20 எல் 3628 என்ற பதிவெண் கொண்ட ஓம்னி வேன் வண்டியை முத்தா புதுப்பேட்டையை சார்ந்த பாபு என்பவரிடம் பிரசவத்திற்கு வாகனம் தேவை என வாடகைக்கு பேசி அதனை 1 மற்றும் 2 எதிரிகள் அதே காரில் சென்று மாமண்டுர் செல்லும் வழியில் மேற்படி வாகனத்தை நிறுத்தி மது அருந்திவிட்டு ராகு காலம் முடிந்து பிறகு செல்லலாம் என்று சொல்லி சிறிது நேரம் கழித்து மீண்டும் மேற்படி காரில் பாபு என்பவர் ஓட்ட 1, 2 எதிரிகள் பின்னால் அமர்ந்திருந்ததாகவும், அதில் அன்பு என்ற அன்பழகன் பாபுவின் கழுத்தில் இரும்பு செயினை போட்டு இழுத்ததாகவும், தினக்குமார் (எ) தினேஷ்குமார் அவர் வைத்திருந்த கத்தியால் பாபுவின் கழுத்தை அறுக்க முற்பட்டபோது பாபு கையால் தட்டிவிட்டதில் பாபுவிற்கு முகத்தில் காயம் ஏற்பட்டது என்றும், அதனால் பாபு வண்டியை அங்கேயே நிறுத்திவிட்டதாகவும், பிறகு அன்பழகன் செயினை எடுத்துவிட்டு பாபுவின் முகத்தை கல்லால் குத்தியதாகவும் பாபு அங்கிருந்து தப்பித்து ஓடி விட்டதாகவும், பின்னர் மேற்படி காரை 2ம் எதிரி தினக்குமார் ஓட்ட

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:16:57 +0530

அவருடன் 1ம் எதிரி அன்பு (எ) அன்பழகன் பயனித்ததாகவும், மேற்படி வாகனத்தை ஆரம்பாக்கம் கொலை வழக்கிற்கு பயன்படுத்தியதாகவும், இந்த விவரங்களை மற்றொரு எதிரியான விஜயகுமாருக்கு தெரிவித்ததாகவும், அதன் பிறகு காளஹஸ்தியை சேர்ந்த பாபுவிடம் மேற்படி காரை ரூ.60,000/- க்கு விலை பேசி அட்வான்சாக ரூ.2,000/- (சாட்சியத்தில் உள்ளபடி) பெற்றுக்கொண்டு மீதி பணத்தை அசல் ஆர்.சி புத்தகத்தை அவரிடம் கொடுத்துவிட்டு வாங்கி கொள்வதாக சொன்னதாகவும், மேற்படி சங்கதியை மற்றொரு எதிரியான தினக்குமார் (எ) தினேஷ்குமார் என்பவரும் அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்தார் என்றும், மறுநாள் அதே சாட்சியம் முன்னிலையில் தானும் இவ்வழக்கு 2 எதிரிகளும் காளஹஸ்தி சென்று காளஹஸ்தி பாபுவிடம் இருந்த மாருதி வேன் பதிவு எண் TN 20 L 3628 வாகனத்தையும் அதிலிருந்த கத்தியையும் தினக்குமார் அடையாளம் காட்ட அதனை மகசரில் கைப்பற்றியதாகவும், 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிகோடிட்ட பகுதி **அ.த.சா.ஆ.7** என்றும், 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிகோடிட்ட பகுதி **அ.த.சா.ஆ.8** என்றும், கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.9** என்றும், சிறிய பேனாகத்தி **சா.பொ.1** என்றும் இவ்வழக்கின் எதிரிகளை நிலையம் கொண்டு வந்து கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும் படிவம் 91 **அ.த.சா.ஆ.10** என்றும்

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:17:02 +0530

சாட்சியம் அளித்துள்ளார்.

(ix) **அ.சா.9 ஆரோக்யம்** தனது சாட்சியத்தில் தான் பெரியபாளையம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து 30.06.2011 அன்று ஓய்வு பெற்றதாகவும், கடந்த 02.06.2010 அன்று மேற்படி காவல் நிலையத்தில் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது, அன்றைய தினம் இரவு 9 மணிக்கு முத்தாப்புதுப்பேட்டையை சேர்ந்த பாபு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைப்படி நிலைய குற்ற எண் 484/2010 ன் இ.த.ச.பிரிவு 392ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், அது **அ.த.சா.ஆ.11** என்றும், புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை ஊத்துக்கோட்டை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்ததாகவும், அதன் ஒரு நகலை அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இரவு 10.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் முருகதாஸ் மற்றும் மோகன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பார்வை மகசர் **அ.த.சா.ஆ.12** என்றும் மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.13** என்றும், சாட்சிகள் பாபு, ராமன், கோபி, கோபால், மோகன் மற்றும் முருகதாஸ் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அதன் பிறகு கடந்த 16.06.2010 அன்று ஆரம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் காதர் எதிரிகள் அன்பு (எ) அன்பழகன், தினக்குமார் (எ)

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:17:08 +0530

தினேஷ்குமார் ஆகியோர்களை கைது செய்து விசாரித்த போது மேற்படி எதிரிகள் இருவரும் மற்றும் இவர்களுடன் விஜி (எ) விஜயக்குமார் என்பவரும் சேர்ந்து இந்த குற்ற சம்பவத்தை செய்ததாக தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றும், மேலும் மேற்படி விஜி (எ) விஜயக்குமாரும் இதே சங்கதியை ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் இ.த.ச.பிரிவு 392ன் படிக்கான வழக்கை இ.த.ச. பிரிவுகள் 392, 397 என சட்ட பிரிவுகள் மாதிரி செய்து சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்ததாகவும் அது **அ.த.சா.ஆ.14** என்றும், பின்னர் இவ்வழக்கின் எதிரிகள் அன்பு (எ) அன்பழகன், தினக்குமார் (எ) தினேஷ்குமார் ஆகியோர்களை கடந்த 25.06.2010 அன்று புழல் மத்திய சிறையில் சம்பிரதாய கைது செய்து ஊத்துக்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் பி.டி வாரண்டு மூலம் ஆஜர்படுத்தி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், 3ம் எதிரி விஜி (எ) விஜயக்குமார் இவ்வழக்கில் தான் சம்மந்தபட்டிருப்பதாக தெரிவித்து 16.06.2010 அன்று சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் சரணடைந்துவிட்டதால் அவர் 02.07.2010 அன்று இந்த வழக்கில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும், அதன் பிறகு 28.06.2010 அன்று அடையாள அணிவகுப்பு நடத்துவதற்காக தலைமை குற்றவியல் நடுவருக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பியதில் அவர் உத்தரவின் படி அம்பத்தூர் குற்றவியல் நடுவர் அடையாள

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:17:13 +0530

அணிவகுப்பை நடத்தி முடித்து அந்த அறிக்கையை ஊத்துக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமற்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார் என்றும், அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.15** என்றும், இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்கின் சொத்தான TN20 AL 3628 என்ற பதிவு எண் கொண்ட மாருதி கார் மற்றும் வழக்கு குற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட சிறிய பேனா கத்தி ஆகியவற்றை ஆரம்பாக்கம் காவல் ஆய்வாளர் ஊத்துக்கோட்டை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார் என்றும், மேற்படி ஆம்னி வேன் புகைப்படம் எடுக்கப்பட்டதற்கான 2 புகைப்படங்கள் **அ.த.சா.ஆ.16** வரிசை என்றும், இவ்வழக்கில் காயம் பட்ட பாபுவிற்கு முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர் பாபு ஆர்.ஏ.எம்.பி. என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கில் காயம் பட்ட பாபுவிற்கு சிகிச்சை அளித்த திருவள்ளூர் அரசு தலைமை மருத்துவமனை மருத்துவர் பஞ்சாபிகேசனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அவரிடம் காயச் சான்றிதழை பெற்றதாகவும், ஆந்திரா காளஹஸ்தியை சேர்ந்த பாபு த/பெ.குணா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இத்துடன் இவ்வழக்கில் விசாரணை முடித்து எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 394, 397 உ/இ பிரிவு 109 ன் படிக்கு தண்டிக்கப்படக்கூடிய குற்றம் புரிந்துள்ளதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:17:18 +0530

6. அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகளுடன் அரசு தரப்பு சாட்சியத்தை கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் முடித்துக்கொண்டார்.

7. மேற்கூறிய அரசு தரப்பு சாட்சிகளில் அ.சா.4, அ.சா.5 மற்றும் அ.சா.6 ஆகியோரின் சாட்சிகளைத் தவிர மற்ற சாட்சியங்களின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள விவரங்களைக் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி எதிரிகளிடம் எடுத்துக்கூறி வினவியபோது எதிரிகள் மேற்படி சாட்சியங்களை மறுத்து பொய் சாட்சியம் மற்றும் பொய் வழக்கு என்றனர். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று கூறினர். பின்னர் சாட்சிகள் எவரும் இல்லை என்று கூறி முடித்துக்கொண்டனர். இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 120(B), 394 உ/இ. பிரிவு 397 மற்றும் 3 வது எதிரி மீது இ.த.ச.120(B), 394 உ/இ.பிரிவு 397 உ/இ.பிரிவு 109 படிக்கு சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் / வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் தக்க சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக தகுநிலை ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை காண்பதே ஆகும்.

<u>**9. தீர்வு**</u> :

மேற்படி குற்ற வழக்கானது கடந்த 02.06.2010 அன்று ஆவடி

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:17:23 +0530

முத்தாபுதுப்பேட்டை டிஃபன்ஸ் காலணியைச் சேர்ந்த குப்புசாமி மகன் பாபு என்பவர் பெரியபாளையம் காவல் நிலைய ஆய்வாளருக்கு கொடுத்த எழுத்துமூலமான புகாரின் அடிப்படையில் மேற்படி காவல் நிலைய குற்ற எண்.484/2010 ல் இ.த.ச. பிரிவு 392 படிக்கு சுமார் 23 வயது மதிக்கத்தக்க இரண்டு நபர்களுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு துவக்கப்பட்டுள்ளது. மேற்படி புகாரில் நிகழ்நிலை புகார்தாரர் பாபு டி.எண். 20 எல் 3628 என்ற ஓம்னி கார் வைத்து தொழில் செய்து வந்ததாகவும், 02.06.2010 அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் 23 வயது மதிக்கத்தக்க இரண்டு நபர்கள் சிக்கன் கடை வைத்திருக்கும் கோபால் சொல்லி அனுப்பியதாக தெரிவித்து மாமண்டூர் கிராமத்தில் உள்ள அவர்களுடைய அக்காவை தலை பிரசவத்திற்கு கூட்டி வந்து பட்டாபிராமில் உள்ள செல்வராணி மருத்துவமனையில் சேர்க்கவேண்டும் என்று தெரிவித்ததால் வாடகை ரூபாய் 800 பேசி காரை எடுத்துக்கொண்டு வந்ததாகவும், அந்த காரில் மேற்படி இரண்டு நபர்களும் ஏறி வந்தார்கள் என்றும், மாலை சுமார் 5.30 மணியளவில் வெங்கல் பஜாரில் வந்து நிறுத்த சொன்னதால் தான் ஆம்னி காரை நிறுத்தியவுடன் அவர்கள் இறங்கி செல்போனில் யாரிடமோ பேசிவிட்டு கடையில் பூ மிக்சர் ஸ்வீட் வாங்கி கொண்டு மீண்டும் காரில் வந்து ஏறி மாமண்டூர் போகச்சொன்னதால் தான் மாமண்டுரை நோக்கி காரை ஓட்டியதாகவும், மாமண்டூர் செல்ல ரோட்டில் இருந்து திரும்பும்போது மாந்தோப்பில் காரை

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:17:29 +0530

நிறுத்தச் சொன்னதால் தான் நிறுத்தியதாகவும், சுமார் 6.10 மணிக்கு காரை அவர்கள் சொன்னபடி தான் எடுத்தபோது அவர்கள் இருவரும் தனது பின்னால் உட்கார்ந்துகொண்டு வந்தார்கள் என்றும், அதில் ஒருவர் தன்னுடைய கழுத்தில் செயின் போட்டு இறுக்கியதாகவும், மற்றொருவர் கத்தியால் அறுக்க வரும்போது தான் கத்திவிட்டதால் தன்னுடைய முகத்தாடையில் காயம் ஏற்பட்டது என்றும், கல்லாலும் முகத்தில் குத்தினார் என்றும், இதனால் இடது பக்க கண் புருவத்தில் காயம் ஏற்பட்டது என்றும், அதனை தடுத்து கார் கதவு வழியாக வெளியே ஏறி குதித்தவுடன் தன்னுடைய ஆம்னி வேனை ஒருவன் ஓட்டிக்கொண்டு மாமண்டுர் வழியாகச் சென்றுவிட்டதாகவும், தான் பக்கத்தில் இருந்த நிலத்தில் இறங்கி தப்பித்து ஓடிவந்து இரவு 9 மணியளவில் பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாகவும், தன்னுடைய காரில் வந்த இரண்டு நபர்களில் ஒருவர் புளு கலர் ஜீன்ஸ் பேண்ட்டும் வெள்ளை புளு கலர் டி சர்ட்டும் அணிந்திருந்ததாகவும், மற்றொருவர் டார்க் புளு கலர் ஸ்கை புளு சர்ட் அணிந்திருந்ததாகவும், தன்னுடைய காரில் 9841860868 என்ற எண் கொண்ட நோக்கியா போனையும் வைத்திருந்ததாகவும், எனவே அதனையும் கண்டுபிடித்துக்கொடுக்கும்படி தெரிவித்ததோடு இந்த புகாருக்கு முன்பாக வெங்கலில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக தெரிவித்துள்ளார்.

10. மேற்படி நிகழ்நிலை புகார்தாரர் பாபு இவ்வழக்கில் அ.சா.2 ஆக

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:17:35 +0530

விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் புகாரில் தெரிவித்துள்ள சங்கதிகளில் குறிப்பிட்டுள்ள விவரங்களை சாட்சியமாக அளித்துள்ளார். ஆனால் மேற்படி டி எண் 20 எல் 3628 என்ற மாருதி ஆம்னி காரின் நிறம் சாக்லேட் நிறம் என்றும், மேற்படி சம்பவத்திற்கு பிறகு மாமண்டூர் அருகில் இருந்த கிராமத்திற்குச் சென்று அங்கிருந்தவர்களிடம் உதவி கேட்டபோது அங்கிருந்த ஒரு நபர் தன்னை வெங்கல் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார் என்றும், அதன்பிறகு மேற்படி வெங்கல் காவல் நிலையத்தில் ஒரு புகாரை எதிரிகள் மீது கொடுத்தாகவும் தெரிவித்துள்ளார்.

11. மேற்படி நிகழ்நிலை புகார்தாரர் பாபு தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்துள்ளது போன்று வெங்கல் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்பதும், மேற்படி புகாரில் பெரியபாளையம் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. கடந்த 02.06.2010 அன்று மேற்படி நிகழ்நிலை புகார்தாரர் பாபு மாமண்டூர் அருகில் ரோடில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தபோது அ.சா.1 கோபி அவரிடம் சென்று விசாரித்ததாகவும், அப்போது பாபுவை இரண்டு நபர்கள் அடித்து போட்டுவிட்டு அவரது வாகனத்தை எடுத்துச் சென்றுவிட்டதாக தன்னிடம் தெரிவித்தார் என்றும், மேற்படி பாபுவை பார்த்தபோது அவரது முகத்தில் இரத்த காயம் இருந்தது என்றும், அதனால் மேற்படி பாபுவை வெங்கல் காவல்

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:17:40 +0530

நிலையத்திற்கு அழைத்துச் சென்று புகார் கொடுத்ததாகவும், தான் பாபுவை வெங்கல் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றதற்காக காவல் துறையினர் தன்னிடம் ஒரு கையெழுத்து பெற்றார்கள் என்றும் தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.2 பாபு அவரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற அ.சா.1 கோபி ஆகியோர்கள் பெரியபாளையம் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தாக தெரிவிக்கவில்லை என்பது தெரியவருகிறது. மேற்படி இருவரும் வெங்கல் காவல் நிலையத்தில் எழுத்துமூலமான புகார் கொடுத்தாக தெரிவித்துள்ள காரணத்தினால் இவ்வழக்கின் முதல் புகார் என்ன ஆனது என்பதை பொறுத்து அரசு தரப்பில் சரியான வகையில் விளக்கப்படவில்லை. மேலும் பாபு புகாரை கொடுப்பதற்கு முன்பாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக தனது புகாரில் தெரிவித்துள்ளார். ஆனால் மேற்படி அ.சா.2 பாபுவும், அ.சா.1 கோபியும் மேற்படி அ.சா.2 பாபுவிற்கு ஏற்பட்ட காயத்திற்காக வெங்கலில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றதாக யாதொரு சங்கதியும் தெரிவிக்கவில்லை. அதேபோன்று கடந்த 16.12.2016 அன்று முதல் விசாரணை செய்யப்பட்ட பாபு முழுமையாக சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக அரசு வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன்பிறகு மேற்படி நிகழ்நிலை புகார்தாரர் பாபுவை இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தி தொடர்

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:17:45 +0530

முதல் விசாரணை செய்வதற்கு அரசு தரப்பில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் அவரை முன்னிலைப்படுத்த இயலவில்லை என்று அரசு தரப்பு வழக்குரைஞர் தெரிவித்ததோடு அதற்குறிய கிராம நிர்வாக அதிகாரி சான்றிதழையும் தாக்கல் செய்துள்ளார். இது மேற்படி அ.சா.1 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு இயலாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வழக்கில் எதிரிகள் நேரிடையாக கைது செய்யப்படவில்லை என்ற நிலையில் மேற்படி 1, 2 எதிரிகளை ஆரம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண்.294/2010 ல் 16.06.2010 அன்று மேற்படி காவல் நிலைய ஆய்வாளர் சாட்சிகள் வெங்கடேசன் மற்றும் சுப்பிரமணி ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது அவர்கள் தாமாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும், அவர்கள் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பெரியபாளைய காவல் நிலைய குற்ற எண்.484/2010 வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள டி.எண்.20 எல் 3628 என்ற பதிவெண் கொண்ட ஆம்னி வேனை ஆந்திர மாநிலம் காளஹஸ்தியை சேர்ந்த பாபு என்பவரிடமிருந்து கைப்பற்றியதாகவும், மேற்படி வாகனத்தை கொலை வழக்கிற்கு பயன்படுத்தியதாக மேற்படி எதிரிகள் தெரிவித்ததோடு அந்த கொலை வழக்கில் மற்றொரு எதிரி விஜயகுமாரும் பங்கு பெற்றார் என்று தெரிவித்த காரணத்தினாலும், மேற்படி எதிரி விஜயகுமார் சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் சரண் அடைந்துவிட்ட காரணத்தினாலும் பின்னிட்டு அவரை

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:17:51 +0530

கைது செய்ததாகவும் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட மேற்படி கால கட்டத்தில் ஆரம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளராக இருந்த அகமது அப்துல் காதர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

12. இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.2 பாபுவிற்கு சொந்தமான டி எண்.20 எல் 3628 என்ற ஆம்னி வேனை ஆரம்பாக்கம் போலிசார் தனது வீட்டிற்கு வந்து குற்ற வழக்கை பற்றி தெரிவித்து கைப்பற்றிச் சென்றார் என்று இவ்வழக்கில் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட ஸ்ரீகாளஹஸ்தியை சேர்ந்த பாபு அவரது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி ஆம்னி வேனை தன்னிடம் விற்பனை செய்த நபர் இவ்வழக்கின் இரண்டாம் எதிரியான தினேஷ் குமார் என்றும், தனக்கு அவரை தவிர மற்ற எதிரிகளை தெரியாது என்றும், மேற்படி வாகனத்திற்காக விலை ரூ.60,000/- பேசி அட்வான்ஸ் தொகை ரூ.5,000/-த்தை தினேஷ்குமாரிடம் கொடுத்திருந்ததாகவும், அசல் ஆர்.சி. புத்தகத்தை கொடுக்கும்போது பாக்கித் தொகையை கொடுப்பதாகவும் அவரிடம் சொல்லியிருந்ததாகவும், ஆனால் அதற்கு முன்பாக மேற்படி ஆரம்பாக்கம் காவல் ஆய்வாளர் ஆம்னி வேனை திருட்டு வேன் என்று சொல்லி கைப்பற்றிச்சென்றுவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி அ.சா.5 பாபுவின் சாட்சியத்தின்படிக்கு இரண்டாம் எதிரி தினேஷ்குமார் ஆம்னி வேனை அவரிடம் விற்பனை செய்ததாக கண்டிருந்தபோதிலும் இவ்வழக்கு நிலுவையில்

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:17:57 +0530

இருந்தபோதே மேற்படி தினேஷ்குமார் இறந்துவிட்ட காரணத்தினால் அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் கடந்த 26.10.2017 அன்று அற்றுபோய்விட்டது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. 1 மற்றும் 3 ஆம் எதிரிகளை தனக்கு தெரியாது என்று அ.சா.5 பாபு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

13. ஆரம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண்.294/2010 வழக்கில் 16.06.2010 அன்று மாலை 4 மணியளவில் இவ்வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகளை சாட்சிகள் வெங்கடேஷ் மற்றும் சுப்பிரமணி ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும் அதன் அடிப்படையில் ஆம்னி வேனையும் இவ்வழக்கின் அ.சா.2 பாபுவை தாக்குவதற்கு பயன்படுத்திய கத்தியையும் அ.த.சா.ஆ.9 ன் படிக்கு அ.சா.8 அகமது அப்துல் காதர் கைப்பற்றியதாக தெரிவித்திருந்தபோதிலும் மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான வெங்கடேஷ் மற்றும் சுப்பிரமணி இவ்வழக்கில் அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டதில் அவர்கள் அரசு தரப்பினை சார்ந்து சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக மாறிவிட்டார்கள். எனவே, மேற்படி வெங்கடேசனின் மூலமாக ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பங்கள் மட்டும் அ.த.சா.ஆ.2 மற்றும் அ.த.சா.ஆ.3 ஆகவும், மேற்படி சுப்பிரமணியம் மூலமாக ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல்

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:18:05 +0530

மகசரில் உள்ள கையொப்பங்கள் மட்டும் அ.த.சா.ஆ.4 மற்றும் அ.த.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் 1 மற்றும் 2 எதிரிகள் அடையாளம் காட்ட ஆம்னி வேன் மற்றும் பேனாகத்தி கைப்பற்றப்பட்டது என்பது அரசு தரப்பில் தனி நபர் சாட்சியங்களின் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்பதை தெரிந்துகொள்ள முடிகின்றது. அ.சா.5 பாபுவும் தமிழ்நாட்டிலிருந்து போலிசார் தனது வீட்டிற்கு வந்து ஆம்னி வேனை திருட்டு வண்டி என்று சொல்லி எடுத்துச் சென்றதாக மட்டும் தெரிவித்துள்ளார். மேற்படி போலிசாருடன் 1 மற்றும் 2 எதிரிகளும் சாட்சிகள் வெங்கடேசன் மற்றும் சுப்பிரமணி ஆகியோர்களும் அழைத்து வரப்பட்டார்கள் என்று தெரிவிக்கவில்லை என்பதால் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மேற்படி எதிரிகள் அடையாளம் காட்ட ஆம்னி வேன் மற்றும் பேனா கத்தி அ.சா.8 ஆல் கைப்பற்றப்பட்டது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்படும் வாதம் ஏற்புடையதாக இல்லை.

14. கடந்த 02.06.2010 அன்று 1 மற்றும் 2 எதிரிகள் தாக்கிய காரணத்தினால் வெங்கலில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அ.சா.2 பாபு கிசிச்சை பெற்றதாக அவரது புகாரில் தெரிவித்துள்ளார். இந்த சங்கதியை அவரை அழைத்துச் சென்றதாக சொல்லும் அ.சா.1 கோபி தெரிவிக்கவில்லை. மேற்படி மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர் ராமச்சந்திரன் இவ்வழக்கில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுளளார். அவர் தனது சாட்சியத்தில் மேற்படி பாபுவிற்கு எவ்வாறு

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:18:22 +0530

காயங்கள் ஏற்பட்டது என்று தான் அவரை விசாரித்தபோது பாபுவின் வாகனத்தை வாடகைக்கு வேண்டும் என்று கேட்டு இரண்டு நபர்கள் ஏறி வண்டியை ஓட்டிய சிறிது நேரத்தில் அவரை பிடித்து கீழே தள்ளிவிட்டு அந்த வண்டியை எடுத்துச் சென்றுவிட்டதாக தெரிவித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.2 க்கு சம்பவத்தன்று காயம் ஏற்பட்டதாக சொல்லும் விதத்தை அ.சா.2 மற்றும் அவருக்கு முதலுதவி சிகிச்சையளித்தாக சொல்லும் அ.சா.3 ஆகியோர்கள் இணைந்த வகையில் தெரிவிக்கவில்லை.

15. மேற்படி முதலுதவி சிகிச்சைக்கு பிறகு அ.சா.2 பாபு திருவள்ளூர் அரசு தலைமை மருத்துவமனையில் 03.06.2010 அன்று காலை 12.25 மணிக்கு தன்னை அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் கல் கத்தி மற்றும் சங்கிலி கொண்டு 02.06.2010 அன்று மாலை 6.15 மணியளவில் மாமண்டுரில் வைத்து தாக்கியதாக தெரிவித்ததாகவும், அவரை பரிசோதித்தபோது தாடையில் 1x1x1 செ.மீ. அளவில் தோல் கிழிந்த காயமும், அவரது நெற்றியின் இடது பகுதியில் 2x1x1 செ.மீ. அளவில் தோல் கிழிந்த காயமும், அவரது தலையின் இடது பகுதியில் 1x1 செ.மீ. அளவில் இரத்த கட்டும் காணப்பட்டது என்றும், அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து வெளி நோயாளியாக சிகிச்சை அளித்தாகவும், அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்று அ.த.சா.ஆ.6 காயச்சான்றிதழை வழங்கியதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி 02.06.2010 அன்று மாலை 06.15

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:18:28 +0530

மணிக்கு சம்பவம் நடைபெற்ற பிறகு அ.த.சா.ஆ. 11 ஆவணத்தின் அடிப்படைக்கு இரவு 9 மணிக்கு அ.த.சா.ஆ.1 புகாரை பாபு கொடுத்துள்ளதாக தெரியவருகிறது. எனவே, மேற்படி புகாருக்கு முன்பாகவே முதலுதவி சிகிச்சை பெற்றதாக தெரிவித்துள்ள பாபு என்ன காரணத்திற்காக மீண்டும் மறுநாள் 12.25 மணிக்கு திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு வந்து புறநோயாளியாக சிகிச்சை பெற்றார் என்பதற்கும் ஏன் காலதாமதமாக திருவள்ளூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்றார் என்பதற்கும் அரசு தரப்பில் எவ்விதமான காரணங்களும் தெரிவிக்கப்படவில்லை. மேலும் இது வேறு பிரச்சினையை தீர்ப்பதற்காக புகார் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் திருவள்ளூர் அரசு தலைமை மருத்துவமனையில் அ.சா.2 சிகிச்சை எடுத்துக்கொண்டிருக்க கூடும் என்பதை அனுமானிக்க கூடிய வகையில் உள்ளது.

16. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் பெரியபாளையம் காவல் நிலைய குற்ற எண்.484/2010ல் இ.த.ச.பிரிவு 392 பிரிவின் படிக்கு வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்குச் சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தை சாட்சிகள் முருகதாஸ், மோகன் முன்னிலையில் தயார் செய்ததாகவும், அவை அ.த.சா.ஆ.12 மற்றும் அ.த.சா.ஆ.13 என்றும், பின்னர் இவ்வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகள் ஆரம்பாக்கம் காவல் நிலைய வழக்கில்

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:18:33 +0530

16.06.2010 அன்று மேற்படி காவல் நிலைய ஆய்வாளர் காதர் அவர்களால் கைது செய்யப்பட்டு மேற்படி எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் இவ்வழக்கு சம்பவத்தை பற்றி தெரிவித்திருந்த காரணத்தினால் புழல் சிறையில் இருந்த 1 மற்றும் 2 எதிரிகளை ஊத்துக்கோட்டை நீதிமன்ற அனுமதியோடு சம்பிரதாய கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும் 3 ஆம் எதிரி விஜய் (எ) விஜயகுமார் சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் சரண்டராகிவிட்ட காரணத்தினால் அவரையும் இவ்வழக்கில் கைது செய்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தியதாகவும், பின்னிட்டு மேற்படி எதிரிகளை அடையாளம் காட்டுவதற்காக முதன்மை குற்றவியல் நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி மேற்படி தலைமை குற்றவியல் நடுவர் உத்தரவுப்படி அம்பத்தூர் குற்றவியல் நடுவர் கடந்த 05.07.2010 அன்று அடையாள அணிவகுப்பை நடத்தினார் என்றும், அவர் அடையாள அணிவகுப்பை முடித்து ஊத்துக்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பி வைத்துள்ளார் என்றும், அந்த அறிக்கை அ.த.சா.ஆ.15 என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி அ.த.சா.ஆ.15 ல் இவ்வழக்கில் 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டு அ.சா.2 பாபுவினால் அடையாளம் காட்டப்படுகிறார்களா என்று பரிசோதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.2 பாபு தனது புகார் மற்றும் முதல் விசாரணையில் தெரிவித்துள்ளபடி 1 மற்றும் 2 எதிரிகளை அடையாள அணிவகுப்பை நடத்திய அம்பத்தூர் நீதித்துறை

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:18:39 +0530

நடுவருக்கு சரியான வகையில் அடையாளம் காட்டியுள்ளார். ஆனால் இவ்வழக்கு சம்பவத்தில் 3 ஆம் எதிரி எந்தவகையில் தொடர்பு கொண்டுள்ளார் என்பதை பொறுத்து அரசு தரப்பில் தெளிவுபடுத்தப்படாத நிலையில் என்ன காரணத்திற்காக 3 ஆம் எதிரி சேர்க்கப்பட்டுள்ளார் என்பது மேற்படி புலன் விசாரணை அதிகாரியால் வெளிப்படுத்தப்படவில்லை. மேற்படி 3 ஆம் எதிரியும் இவ்வழக்கு நிலுவையில் இருந்தபோதே கடந்த 27.09.2018 அன்று இறந்துவிட்ட காரணத்தினால் அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுபோய்விட்டது என்று இந்நீதிமன்றத்தால் உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, கடந்த 02.06.2010 அன்று வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லும் 2 எதிரிகளில் முதல் எதிரி மட்டும் தற்போது உயிருடன் உள்ளார் என்ற காரணத்தினால் அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பார்க்கும்போது, அ.சா.2 பாபு அம்பத்தூர் நீதித்துறை நடுவரிடம் 1 மற்றும் 2 எதிரிகளை அடையாள அணிவகுப்பில் சரியான வகையில் காட்டியிருந்தபோதிலும், மேற்படி அ.சா.2 பாபு அதனை பொறுத்து முழுமையாக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு முன்வரவில்லை. எனவே, அவர் எந்த அடிப்படையில் அடையாளம் காட்டினார் என்பதையும் மேற்படி எதிரிகள் அ.சா.2 பாபுவிற்கு ஏற்கனவே தெரிந்தவர்களா அல்லது இல்லையா என்பதையும் குறுக்கு விசாரணையின் மூலம் சோதிக்க இயலாத

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:18:44 +0530

நிலை ஏற்பட்டுள்ளது. 1ம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு எந்தவொரு தனி நபர் சாட்சியமும் இல்லை என்ற சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட நபராக சொல்லும் பாபுவின் சாட்சியம் மட்டும் இருந்தால் போதுமானது என்ற நிலையிலும் பாபு முழுமையாக சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தினாலும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் இருவரும் அரசு தரப்பை சார்ந்து சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக மாறிவிட்ட காரணத்தினாலும் இ.த.ச. பிரிவு 392 படிக்கான இவ்வழக்கை இ.த.ச பிரிவு 392 மற்றும் இ.த.ச.பிரிவு 397 என சட்டப்பிரிவுகள் மாறுதல் செய்து அ.த.சா.ஆ.14 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை தாக்கல் செய்துள்ளதாக அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில் தெரிவித்திருந்தபோதிலும், மேற்படி இ.த.ச பிரிவு 392 மற்றும் 397 ன் படிக்கான குற்றச்சாட்டுகளையும் புரிந்துள்ளார் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்பது தெளிவாக தெரியவருகிறது. எனவே, மேற்படி சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிப்பதே நீதிக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. முடிவில், முதல் எதிரி மீது இ.த.ச. பிரிவு 120(B), 394 உ/இ. 397 பிரிவுகள் படிக்கு சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:18:49 +0530

என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி முதல் எதிரியை கு.வி.மு.ச.235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

18. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள (**P.I.No.05/2017**) சா.பொ. 1 பேனா கத்தி இவ்வழக்கு தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்படும்பட்சத்தில் மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவின்படிக்கும் மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்யப்படாதபட்சத்தில், சா.பொ.1 ஆன பேனா கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்கவும், வழக்கு சொத்தான TN 20 L 3628 லைட் சாக்லட் கலர் மாருதி ஆம்னி வேன் வாகனத்தை அதன் உரிமையாளர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுவிட்ட காரணத்தினால் இவ்வழக்கு தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்படும்பட்சத்தில் மேல் முறையீட்டு நீதிமன்ற உத்தரவிற்கிணங்கவும், மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்யப்படாதபட்சத்தில், மேல் முறையீட்டு காலம் முடிவடைந்த பிறகு அவரே தொடர்ந்து வைத்துக்கொள்ளவும் அவரால் எழுதி கொடுக்கப்பட்ட பிணையை ரத்து செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:18:54 +0530

தேதி 27.10.2023

**தலைமை நீதித்துறை நடுவர்**
மற்றும் உதவி அமர்வு நீதிபதி
திருவள்ளூர்

**பின் இணைப்பு :**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| **சாட்சி எண்** | **சாட்சிகளின் பெயர்** |
|---|---|
| அ.சா.1 | திரு. கோபி |
| அ.சா.2 | திரு. பாபு |
| அ.சா.3 | திரு. ராமச்சந்திரன் |
| அ.சா.4 | திரு. வெங்கடேசன் |
| அ.சா.5 | திரு. பாபு |
| அ.சா.6 | திரு. சுப்பிரமணி |
| அ.சா.7 | டாக்டர். பஞ்சாபிகேசன் |
| அ.சா.8 | திரு. அகமது அப்துல் காதர் |
| அ.சா.9 | திரு. ஆரோக்யம்<br>காவல் ஆய்வாளர், பெரியபாளையம் காவல் நிலையம் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 02.06.2010 | புகார் (அசல்) |
| அ.த.சா.ஆ.2 | 16.06.2010 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா. 4 ன் கையெழுத்து (நகல்) |
| அ.த.சா.ஆ.3 | 17.06.2010 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.4 ன் கையெழுத்து (நகல்) |
| அ.த.சா.ஆ.4 | 16.06.2010 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா. 6 ன் கையெழுத்து (நகல்) |
| அ.த.சா.ஆ.5 | 17.06.2010 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.6 ன் கையெழுத்து (நகல்) |
| அ.த.சா.ஆ.6 | 03.06.2010 | காயச்சான்றிதழ் (நகல்) |
| அ.த.சா.ஆ.7 | 16.06.2010 | முதல் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிகோடிட்ட பகுதி (நகல்) |

R VELARAS
Digitally signed by R VELARAS
Date: 2023.10.27 15:19:01 +0530

தேதி 27.10.2023 **தலைமை நீதித்துறை நடுவர்**
மற்றும் உதவி அமர்வு நீதிபதி
திருவள்ளூர்

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.8 | 16.06.2010 | முதல் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிகோடிட்ட பகுதி (நகல்) |
| அ.த.சா.ஆ.9 | 17.06.2010 | கைப்பற்றுதல் மகசர் (நகல்) |
| அ.த.சா.ஆ.10 | 17.06.2010 | படிவம் 91 (அசல்) |
| அ.த.சா.ஆ.11 | 02.06.2010 | முதல் தகவல் அறிக்கை (அசல்) |
| அ.த.சா.ஆ.12 | 02.06.2010 | பார்வை மகசர் (அசல்) |
| அ.த.சா.ஆ.13 | 02.06.2010 | மாதிரி வரைபடம் (அசல்) |
| அ.த.சா.ஆ.14 | -- | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அசல்) |
| அ.த.சா.ஆ.15 | 05.07.2010 | அடையாள அணிவகுப்பு அறிக்கை (அசல்) |
| அ.த.சா.ஆ.16 வரிசை | -- | ஆம்னி வேன் புகைப்படங்கள் 2 எண்ணிக்கை |

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள் –</u>** சா.பொ. 1 – பேனா கத்தி ஒன்று
**<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>** –இல்லை
**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை
**<u>எதிரி தரப்பு சான்றுப்பொருட்கள்</u>** : இல்லை

**<u>வழக்கு விவரக் குறிப்பு</u>** (*<u>Case Summary</u>*)

| | | |
|---|---|---|
| 1 | எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள் | முதல் எதிரி<br>25.06.2010 – 24.09.2010<br>27.07.2020 –14.03.2022<br>2 வது எதிரி<br>25.06.2010 –24.09.2010<br>3 வது எதிரி<br>16.07.2010 –22.09.2010 |
| 2 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 24.09.2010 |
| 3 | கீழமை நீதிமன்றம் வழக்காவணங்களை கு.வி.மு.ச.பிரிவு 209 ன் கீழ் கமிட்டல் செய்த நாள் | 05.08.2011 |

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2023.10.27 15:19:07 +0530

தேதி 27.10.2023 **தலைமை நீதித்துறை நடுவர்** 
மற்றும் உதவி அமர்வு நீதிபதி
திருவள்ளூர்

| | | |
|---|---|---|
| 4 | எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனையப்பட்டு கு.வி.மு.ச.பிரிவு 240 ன் கீழ் குற்றச்சாட்டு வினவப்பட்ட தேதி | 26.06.2013 |
| 5 | அரசு தரப்பு சாட்சியங்களை முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாட்கள் | முதல் விசாரணை / குறுக்கு விசாரணை |
| | அ.சா.1 | 16.12.2016 / -- |
| | அ.சா.2 | 16.12.2016 / -- |
| | அ.சா.3 | 25.07.2019 / -- |
| | அ.சா.4 | 25.07.2019 / -- |
| | அ.சா.5 | 18.08.2021 / 18.08.2021 |
| | அ.சா.6 | 26.08.2021 / 26.08.2021 |
| | அ.சா.7 | 01.09.2021 / 01.09.2021 |
| | அ.சா.8 | 08.09.2021 / 08.09.2021 |
| | அ.சா.9 | 29.09.2021 / 29.09.2021 |
| 6 | எதிரி மீது கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் கீழ் வினவப்பட்ட தேதி | 27.10.2021 |
| 7 | எதிரி தலைமறைவாகி நீதிமன்றத்தில் சரண்டரான / ஆஜர்படுத்தப்பட்ட தேதி | - |
| 8 | மேல்நீதிமன்றத்தின் தடை உத்தரவு மற்றும் அதன் முடிவு | - |

R VELARAS

Digitally signed by R VELARAS
Date: 2023.10.27 15:19:12 +0530

தேதி 27.10.2023

**தலைமை நீதித்துறை நடுவர்**
மற்றும் உதவி அமர்வு நீதிபதி
திருவள்ளூர்